## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## L.A.O.P.No.268/2022

## சாட்சியின் சான்றுரை CW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கண்ணன் | வட்டம் | - | |
| த/பெ | - | கபாலி | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

19.09.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

கோரிக்கைதாரர் சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பார்வை அலுவலர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் பெயர் கண்ணன். எனக்கு சொந்தமான இடம் 2400 சதுரடி ஆகும். நான் எவ்வளவு தொகை வாங்கினேன் என்றால் தோராயமாக ரூ.1,45,000 வாங்கினேன். எங்கள் இடத்தின் சர்வே எண் என்ன என்றால் என் வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தார். என் நிலம் கொள்ளாரில் உள்ளது. எனக்கு கொடுத்த பணம் சதுரடிக்கு கொடுக்கப்பட்டது. எனக்கு எத்தனை மனை உள்ளது என்றால் 2 ஆகும். எனக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ததற்கு எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொன்னது போல் முன்னறிவிப்பு இல்லாமல் என் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னது தவறு என்றால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட பணம் போதவில்லை என்பதற்காக ஆட்சேபனை கடிதம் கொடுத்தேனா என்றால் திண்டிவனம் அலுவலகத்தில் கொடுத்தேன். அதை நான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எனது சொந்த நிலம் ஆகும். அதை நான் 2010ல் வாங்கினேன். தேதி தெரியாது. அதற்குரிய ஆவணத்தை

நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 2010ல் நான் வாங்கம் போது என் நிலத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.1,80,000க்கு தரகர் மூலமாக 2 மனைகளும் வாங்கினேன். எங்கள் நிலத்தின் பக்கத்தில் உள்ள நிலங்களும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால சரிதான். பக்கத்து நிலத்தை குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வி. தொழிற்நுட்ப கல்லூரிக்கு அதிகமாக பணம் கொடுத்துள்ளார்களா என்றால் அவர்கள் அதிகம் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்கள். எங்கள் இடத்திற்கும் ராகவேந்திரா மனை பிரிவிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் அருகில் தான் உள்ளது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு மதிப்பு ரூ.1 கோடி என்பது எதை வைத்து சொன்னேன் என்றால் என் நண்பர்கள் சொல்லி சொன்னேன். நான் சொல்வது தவறு என்றும் அரசு அதிகாரிகள் எனது பெயரில் காழ்புணர்ச்சி இல்லாமல் வழிகாட்டி மதிப்பு, மார்க்கெட் மதிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை பரிசோதித்து எனக்கு நிலத்தின் மதிப்பை நிர்ணயம் செய்தார்கள் என்றால் சரியல்ல. சரியான தொகை தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் நான் கேட்கும் தொகை மிகவும் அதிகம் என்றும் அதை அளிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.